# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


| Vol - 21 | April ஏப்ரல் | 2021 |
|---|---|---|
| ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/- |




ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது;

1. யோவான் 4:7


கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| சிறுவர் பகுதி | 10 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. சியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)


**OUR ENGLISH TV PROGRAM**


**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**


**WORLD VEDIO BIBLE SCHOOL ENGLISH BOOKS NOW AVAILABLE IN INDIA**


**INTERNATIONAL EDITION - "USA PRINTING"**

**கிருபையுள்ள வார்த்தை**

**பரலோக கடவுளின் பேரன்பை உணர்த்தும் பரிசுத்த வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 103**

# கர்த்தர் அன்பாகவே இருக்கின்றார்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



**அன்பானவர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.**
**இந்த மாதம் உங்களோடு கடவுளுடைய அன்பைப் பற்றி பகிர்ந்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.**

## கடவுளும் அன்பும்

அன்பு என்பது கடவுளால் உண்டானதாயிருக்கின்றது. நாம் அவரிடத்தில் அன்பாக இருந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பாக இருப்பதினாலே, தனது குமாரனை நமது பாவங்களிற்காக கிருபாதார பலியாக ஒப்புக்கொடுத்ததினால் அன்பு உண்டாயிருக்கின்றது என்றும், அன்பை உண்டாக்கிய கடவுள் அன்பாகவே, அதாவது, அன்புள்ளவராகவே இருக்கின்றார் என்றும், நாம் பிழைத்திருக்கும்படி கடவுள் தனது ஒரே பேரான குமாரனை அனுப்பினதால் மனுக்குலம் மீது அவர் கொண்ட அன்பு வெளிப்பட்டது என்றும் நாம் பைபிளிலிருந்து அறிந்துக்கொள்கின்றோம். **1யோவான் 4:7-10** "பிரியமானவர்களே,ஒ ருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது."

"அகாப்பே" (AGAPE) என்ற கிரேக்க வார்த்தை இந்த தெய்வீக அன்பைக்குறிக்கின்ற பதத்தில் வருகின்றது. இதன் பொருள் "நிபந்தனையற்ற அன்பு" (Unconditional Love) என்பதாகும். ஆண்டவர் இயேசு, ஊழியத்தில் மீண்டும் மீண்டும் குறிப்பிடும் அன்பின் வகை இதுவேயாகும். பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மைக் காப்பாற்ற சிலுவையில் மரித்தபோது "அகாப்பே" அன்பை இயேசு மிகச்சரியாக எடுத்துக்காட்டுகிறார். **ரோமர் 5:8** "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."

கடவுளுடைய அன்பு எப்படிப்பட்டது என்பதனை நாம் விளங்கிக்கொள்ள, அதாவது எளிமையாக புரிந்து கொள்ள ஆண்டவர் இயேசு தமது பேச்சினால், அன்பின் ஆழம் உயரம் இன்னதென்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்; மற்றும், அதற்காக வேண்டுதல் செய்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். **எபே 3:18-19** "சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துக்கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்."

## கடவுளின் அன்பு பொதுவானது

**மத்தேயு 19:13** "பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்."

யூதர்கள் ஆயக்காரர்களையும், பாவிகளையும், சமாரியரையும் மிகவும் அற்பமாக எண்ணினார்கள். அவர்களிடத்திலான தொடர்பை பாவமாகவும், அசிங்கமாகவும் கருதினார்கள். மேசியாவாகிய ஆண்டவர் இயேசு எங்களுக்கானவர் மாத்திரம் என்பது அவர்களது நம்பிக்கை. ஆண்டவர் இயேசுவோ எல்லாரையும் நேசித்தார்; எல்லோரிடமும் அன்பை வெளிப்படுத்தி, அனைவரையும் சமமாக நடத்தினார். அதை

அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் ஆண்டவரையே குற்றப்படுத்தினார்கள் மற்றும் எதிர்த்து நின்றார்கள். **மத்தேயு 9:10–11** "பின்பு அவர் வீட்டிலே போஜன பந்தியிருக்கையில், அநேக சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்." ஆயினும் ஆண்டவர் இயேசு, கடவுளுடைய அன்பு எல்லாருக்குமானது என்பதினை அவர்களுக்கு புரியவைப்பதிலும், வெளிப்படுத்துவதிலும் உறுதியாக இருந்தார். **மத்தேயு 9:12** "இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை."

கடவுள் ஏதோ ஒரு சாரரை மாத்திரம் நேசிப்பதில்லை. அவர் அனைவரையும் நேசிக்கின்றார். காரணம் அனைவருமே அவரின் கைக்கிரியைகள். எல்லாரும் அவருடைய பார்வையில் சமமே. அனைவரும் இரட்சிக்கபட வேண்டும் என்பதே அவரது சித்தம். **1தீமோ 2:4** "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்."

அதற்காகத்தான் அவர் தமது குமாரனை பாவங்களை நிவர்த்தி செய்கின்ற பலியாக அனுப்பினார். கிறிஸ்துவும் அதற்காகத்தான் பலியானார். **1 யோவா 2:2** 'நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."

ஆண்டவர் இயேசு சமாரிய பெண்ணை சந்தித்து சத்தியத்தை போதித்தார். சமாரியர்களை தேடிச்சென்று அவர்கள் மத்தியில் தங்கி, சத்தியத்தினை அறிவித்தார் **(யோவான்4).** ஆயக்காரனாகிய மத்தேயுவை தனது அப்போஸ்தலனாக்கினார் **(மத் 9).** பாவிகள் என சமுதாயத்தினால் புறக்கணிக்கப்பட்டவர்களையும் தேடி சென்று சந்தித்தார், மற்றும் தன்னை தேடி வந்த யாரையும் ஏற்றுக்கொண்டார். **யோவான் 6:37** "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை."

## கடவுளின் அன்பு சீர்படுத்தும்

**நீதிமொழிகள் 3:11,12** "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்து போகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்."

கடவுளின் அன்பு என்பது, நம்மை சீர்ப்படுத்துவதாயிருக்கின்றது. நமது தவறுகளை சுட்டிக்காட்டி திருத்துகின்றார். நமது பாவங்களை கண்டித்து உணர்த்துகின்றார். நம் ஆத்துமா பாதாளத்தில் சென்றுவிடாதபடி நம்மை தண்டிக்கவும் செய்கின்றார். அது, அவர் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடேயாகும். நம்மை இரட்சிக்க தனது குமாரனை பலியாக தந்தவர். தொடர்ந்து நாம் இரட்சிப்பில் நிலைத்திருக்க நம்மை சிட்சித்து, சீர்படுத்துகின்றார். **எபி 12:9–10** "அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்றுதோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்."

பள்ளியில் மாணவர்கள் கண்டிக்கப்பட கூடாது. அவர்கள் என்ன தவறு செய்தாலும் தண்டிக்க கூடாது என்ற மனோநிலைக்கு பெற்றோர் சென்றதால்,சமூகம் எவ்வளவு சீரற்று இருக்கின்றது என்பதை நாம் கண்கூட காண்கின்றோம். இந்த இன்றைய அதிபயங்கரமான நவநாகரீக உலகின் போக்கும் சபைக்குள்ளும் வந்துவிட்டது மிகவும் வேதனைக்குரியது. பிரசங்கில் கவலையைப் போக்கும் அமிர்தம் போன்று பார்க்கின்றனர்; அது நமது ஆத்துமாவை அழிவிலிருந்து காக்க கண்டித்து உணர்த்தும் அருமருந்து என்பதை மறந்துவிட்டனர். **எபி 12:11** "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்."

சபை பிரசங்கியார், போதனையில் கண்டித்து உணர்த்தினால், அடுத்த வாரம் வேறு ஒரு இடம்தேடி

செல்லும் நிலையற்ற மனதுள்ளவர்களாயிருக்கின்றனர். இது கடவுளின் திட்டத்தை தோற்கடிக்க சாத்தான் பயன்படுத்தும் நயவஞ்சக ஆயுதம் என்பதை புரியாமலிருக்கின்றனர். ஒருவர் சபைக்குள் நுழைய, இருக்க, ஆண்டவர் சட்டதிட்டங்கள் (ஒழுங்குகள்) கொடுத்துள்ளார். ஆகையால், தன்னை கண்டிக்க இடமளிக்காத எவரும் சீர்படுத்தப்படவே முடியாது! அப்படி இடமளிக்காதோர் சத்தியத்தை புறக்கணித்து மாறிவிடும் அபாயம் இருக்கின்றது. அவர்கள் கடவுளுக்கு அருகில் இருப்பதாக நினைத்துக்கொண்டு, வெகு தொலைவில் இருக்கின்றனர். அவர்களது ஆத்மீக செயல்பாடுகளும் வீணாகின்றன என்பதும் மிகவும் பரிதாபத்திற்குரியதே. **மத்தேயு 15:8** "மாயக்காரரே, உங்களைக்குறித்து இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்."

### கடவுளின் அன்பு மறுவாழ்வளிக்கும்

**எசேக்கியேல் 18:23** "துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

பாவம் செய்தவர்களை தண்டிப்பது என்பது கடவுளுடைய நீதி, அவர் தன்னுடைய நீதியில் ஒருபோதும் மாறுவதில்லை. 'உப்பை தின்னவன் தண்ணி குடிக்கனும், தப்பை செய்தவன் தண்டிக்கப்படனும்' என நம் ஊர் பழமொழியும் உண்டு. கடவுளுடைய நீதிமன்றத்தில் நீதி பிசகுவதில்லை. நிச்சயமாக நீதிமான் தண்டிக்கப்படுவதுமில்லை; அதேபோல குற்றவாளி தப்பிப்பதும் இல்லை, பாவம் செய்தவர்கள் தண்டனைக்கு உரியவர்களே! தண்டனை என்பது அழிப்பதற்கு அல்ல; மாறாக, அவர்களை திருத்துவதற்காக இருக்க வேண்டும் என்பதினால், சர்வவல்ல கடவுள் தனது பேரன்பினால், அவர்களை அழிக்காமல், திருந்தி வாழ விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் மறுவாய்ப்பளித்து மறுவாழ்வு அளிக்கின்றார். அவர்கள் அழிந்துவிடக்கூடாது என்பதில் கடவுள் கருத்தாக இருக்கின்றார். **2பேதுரு 3:9** "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."



நரகத்தின் கொடூரத்தினை முற்றும்முடிய அறிந்தவர் கடவுள் ஒருவரே! ஆகையால், நம்மில் ஒருவர்கூட நரகத்திற்கு போய்விடக்கூடாது என்பதே அவரின் விருப்பமாகும்; மற்றும், இந்த காரியத்தில் அவர் மிகவும் வினயமாகவும் இருக்கின்றார். **மத்தேயு 18:14 "இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல."** தன்னிடத்தில் வருகின்ற ஒருவரையும் அவர் தள்ளிவிடுவதில்லை **(யோவான் 6:37).** மங்கி எரிகின்ற விளக்கை அணைப்பதும் இல்லை **(ஏசாயா 42:3).** ஆகையால் திருந்தி வாழ விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் அவர் வாய்ப்பளிக்கின்றார்.

பாவத்தினால் அழிந்து வீணாய் போய், திருந்தி திரும்பிவந்த இளைய குமாரனிடம் பேரன்பை காட்டும் தகப்பனைப் போலவே நமது பரமபிதா இருக்கின்றார் **(லூக் 15:11−32).** இந்த தெய்வீக பேரன்பைதான், ஆண்டவர் இயேசு, விபச்சாரத்தில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட பெண்ணிடம் வெளிப்படுத்தினார் **(யோவான் 8).** ஆகையால் தான், அழிவிற்கேதுவான நாம் மறுவாழ்வு பெற்றிருக்கின்றோம். நாம் பெற்ற இந்த தெய்வீக அன்பை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்துவோம். இந்த அறைகூவல் தான் பிலேமோனுக்கும், அவன் வீட்டிலே கூடிவந்த சபைக்கும் வைக்கப்பட்டது **(பிலேமோன்).** இதுவே வேதாகமம் நம்மீதும் வைக்கின்ற அறைகூவல்.

இறுதியாக, அன்பானவர்களே! இந்த பூமியில் நாம் வாழும் நாட்கள் மிகவும் குறைவே. ஆகையால், கடவுள் நாம் வாழும்படியாக கொடுத்த ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியாக வாழ, தினமும் எல்லோரிடமும் சிந்தனையினால், வார்த்தையினால் மற்றும் செயலினால் அன்பை விதைப்போம். வெறுப்பு, கசப்பு, கோபம், பொறாமை மற்றும் அதை சார்ந்த வீண் வைராக்கியங்கள் என்னும் குப்பைகளை நம்மிலிருந்து தூக்கி எறிந்து, நம்மை பரிசுத்தப்படுத்துவோம். நமக்குள் கடவுளின் பேரன்பை ஊற்றிய **(ரோமர் 5:5).** பரிசுத்த ஆவியானவர் நம்மில் தங்கி நம்மை வழிநடத்த நம்மை நாமே ஆயத்தப்படுத்துவோம். வெறுப்பினால் மற்றும் கசப்பினால் அல்லது கோபத்தினால் எதையும் சாதித்துவிட முடியாது. 'நான் அல்ல, என் கோபமே என்னை தோற்கடித்தது' என்றார் கொடூரனாக வர்ணிக்கப்படும் ஹிட்லர்; அவர், எப்படி வாழக் கூடாது என்பதற்கான உதாரணமாகிவிட்டார். அன்பை விதைத்த ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்பதற்காக உதாரணமாக, ஆண்டவர் இயேசுவும் அவரது அடியார்களும் இருக்கின்றனர். நாமும் அவர்களில் ஒருவராக இருக்க, நாம் பெற்ற இறை அன்பை விதைப்போம் **(1கொரி 13: மத் 22:37−39).** உங்கள் அன்பின் பிரயாசங்களில் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!


## வாசகர்கள் கவனத்திற்கு!

தடையில்லாமல் உங்கள்
**கிருபையுள்ள வார்த்தை**
இதழை தொடர்ந்து
பெறுவதற்கு, உடனே உங்கள் பெயர்.
இதழ் எண்ணுடன் **"மொபைல்"**
எண்ணையும் எங்களுக்கு அனுப்பும்படி
கேட்டுக்கொள்கிறோம்.

பெயர் : ..........................................

பதிவு எண் : ..........................................

மொபைல் : ..........................................

**மேலே குறிப்பிடப்பட்ட உங்கள்
விபரங்களை குறுஞ்செய்தியாகவோ
வாட்ஸ்அப் மூலமாகவோ
அனுப்பவேண்டிய எண்கள்**

**92 4421 4421**
**92 4431 4431**

**விபரங்களை தபாலில் அனுப்புவதற்கு**
**கிருபையுள்ள வார்த்தை, தபால் பெட்டி எண் : 15
அரசரடி, மதுரை − 625 016.**

# கையும் மெய்யுமாக பிடிப்பவள்

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகளே, தேவ பக்தியும், அன்பும் நிறைந்த உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

அன்பான சகோதரிகளே நம்முடைய அன்பை நம் நடத்தையினாலும், செய்கையினாலும் வெளிப்படுத்த வேண்டுமென பரிசுத்த ஆவியானவர் வசனத்தைக்கொண்டு நமக்கு அன்பை பற்றி போதிக்கிறார். **1 யோவான் 3:18** "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்."

யோ. 8ம் அதிகாரத்தில் இயேசுவின் அன்பினால் திருந்திய ஒரு பெண்ணைப் பற்றி பார்ப்போம். இயேசு ஒலிவமலைக்குப்போனார், மறுநாள் தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்கள் அவரிடத்தில் வந்தார்கள். அவர் பண்ணின உபதேசத்தை மக்கள் கவனித்துக் கொண்டிருக்கும்போது, அந்த சமயத்தில் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவர்கள் இயேசுவை பார்த்து: போதகரே, இந்த பெண் விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள் என்றும், மேலும் மோசேயின் சட்டப்படி அதாவது நியாயப்பிரமாணத்தின்படி இவளை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று சொன்னார்கள் **(லேவி 20:10, உபா 22:21).**

ஆனால், ஆண்டவர் இயேசுவா ஒன்றும் பேசாமல் தரையில் குனிந்து எழுதிக்கொண்டிருந்தார். அவர் என்ன எழுதினார் என்பது தெரியவில்லை. அவர்களை பார்த்து, "உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல முதலாவது கல்லெறியக்கடவன் என்றார். அவர்கள் அனைவரும் தங்கள் மனசாட்சியினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள் **(யோவான் 8:10-11).**

அந்த பெண்ணை தண்டிக்கும் அதிகாரமும் பரிசுத்தமும் ஆண்டவருக்கு உண்டாயிருந்தாலும், நான் உன்னை தண்டிக்க விரும்பவில்லை, உன்னை மன்னிக்கின்றேன், போ இனி பாவம் செய்யாதே, அதாவது இனிமேலாவது திருந்தி வாழ், அதற்கான வாய்ப்பை நான் அளிக்கின்றேன் என கொடுத்தார். சட்டத்தின்படி அவளை அழிக்காமல், சத்தியத்தின்படி திருந்தி வாழ வாய்ப்பளித்தார். **2கொரி 3:6** "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது."

அன்பான சகோதரிகளே, பாவம் செய்தவர்கள் சட்டப்படி தண்டனைக்குரியவர்கள் தான், அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. மன்னிப்பு என்பது அவர்கள் பாவம் செய்ய அளிக்கும் வாய்ப்பும் இல்லை. அவர்கள் செய்த பாவத்தோடு ஒத்துப்போவதும் இல்லை. மாறாக உண்மையிலேயே திருந்தி வாழ ஆசைபடுவோருக்கு. சர்வவல்ல பரலோக கடவுள் மனுக்குலம் மீது தான் கொண்ட பேரன்பினால் அளிக்கும் ஒரு வரம். அவரே மன்னித்து திருந்திவாழ வாய்ப்பளிக்கும்போது, நாமும் அவரை போலவே அன்புள்ளவராக மன்னிப்போம். மற்றவர்கள் திருந்தி வாழ உதவுவோம். ஏனெனில் ஒருவர் கூட நரகம் சென்றுவிடக்கூடாது. நாம் பரிசேயர், வேதபாரகர் போல் மற்றவர்களை அழிக்கும்படி குற்றம் சுமத்த வேண்டாம். நமது ஆண்டவர் போல திருந்தி வாழ அன்பு காட்டுவோம் **(கொலே 3:12-13).** கர்த்தர் தாம் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பார்.

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
2. M. செந்தில் – கரூர்
3. M. ராஜா – கரூர்
4. M. ஜோனா – கரூர்
5. A. ஹனா ஜோதி – மதுரை
6. K. பெட்டி பேபி – மதுரை
7. K. கெட்ஸி நேசம் – மதுரை
8. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
9. S. கனிஸ்கா – கரூர்
10. S. லக்ஷிதா – கரூர்
11. S. வெற்றிவேல் – மதுரை

# தமிழகத்தில் 71.79% வாக்குப் பதிவு; மாவட்ட வாரியாக விவரம்

1. திருவள்ளூர் - 68.73 %
2. சென்னை - 59.40 %
3. காஞ்சிபுரம் - 49.47%
4. வேலூர் - 72.31%
5. கிருஷ்ணகிரி - 74.23 %
6. தருமபுரி - 77.23 %
7. திருவண்ணாமலை- 75.63%
8. விழுப்புரம் - 75.51%
9. சேலம் - 75.33 %
10. நாமக்கல் - 77.91%
11. ஈரோடு -72.82 %
12. நீலகிரி - 69.24%
13. கோயம்புத்தூர் - 66.98 %
14. திண்டுக்கல் - 74.04%
15. கரூர் - 77.60 %
16. திருச்சி - 71.38 %
17. பெரம்பலூர் - 73.08 %
18. கடலூர் 73.67 %
19. நாகப்பட்டினம் - 69.62 %
20. திருவாரூர் - 74.90 %
21. தஞ்சாவூர் - 72.17 %
22. புதுக்கோட்டை - 74.47 %
23. சிவகங்கை - 68349 %
24. மதுரை - 68.14 %
25. தேனி - 70.47 %
26. விருதுநகர் 72.52 %
27. ராமநாதபுரம் 67.16 %
28. தூத்துக்குடி 70.00 %
29. திருநெல்வேலி 65.16 %
30. கன்னியாகுமரி 68.41%
31. அரியலூர் - 77.88%
32. திருப்பூர் - 67.48 %
33. கள்ளக்குறிச்சி - 78.00 %
34. தென்காசி - 70.95 %
35. செங்கல்பட்டு - 62.77 %
36. திருப்பத்தூர் - 74.66 %
37. ராணிப்பேட்டை - 74.36 %



**தங்கள் ஜனநாயக கடமையை வாக்களித்து நிறைவேற்றிய வாசகர்கள் அனைவருக்கும் ஆசிரியர் குழுவின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431)** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# நம்மை மேம்படுத்தும் கடவுளின் அன்பு

E. ஜோசப்பிரதீப்

அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இம்மாதம் நம்மை மேம்படுத்தும் கடவுளின் அன்பை குறித்து தியானிப்போம்.

**மாற்கு 10:17-23** வரை உள்ள வசனப்பகுதிகளில், ஒரு பணக்கார வாலிபன் ஆண்டவரோடு பேசின ஒரு சம்பவத்தை குறித்து நம்மால் வாசிக்க முடிகிறது. முதலில் அவனிடம் ஆண்டவரை தேடின ஒரு பண்பை பார்க்க முடிகிறது. அவன் கடவுளுக்கு பயப்படுகிறவனாகவும், கடவுளுடைய வார்த்தையின்படி அதாவது நியாயப்பிரமாணத்தின்படி சிறுவயது முதல் வாழ்கின்றவனாகவும் இருந்தான். மேற்கொண்டு தன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள, நித்திய வாழ்வின் மீது கொணாட பற்றினால், ஆண்டவரிடம் வந்து ஒரு கேள்வியை அவன் கேட்கிறான்.

**''நல்ல போதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்" (மாற் 10:17)** என்பதே அக்கேள்வி. பாருங்கள்! அவன் கேள்வியில், அவன் ஒரு பயபக்தியுள்ள கடவுளுக்கு பிரியமான வாலிபன் என்று தெரிகின்றது. அவன் உலக சம்பந்தமான எதையும் ஆண்டவரிடம் கேட்கவில்லை. கேள்விகள் என்பது எப்பொழுதும் கற்றுக்கொள்ளும் மனோநிலையிலும், சத்தியத்தின்படியான பதிலினால் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற மனோநிலையிலும் கேட்கப்படும்போது, அது நீதியாகிய பலனை தருவதாக இருக்கின்றது. அங்கே இரட்சிப்பும் மகிழ்ச்சியும் உண்டாகும் என்பதனை நினைவில் கொள்வோம்.

ஆண்டவர் அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவனிடத்தில் உள்ள ஒரு குறைவை சுட்டிக்காட்டினார். லூக்கா 15:21 "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார்."

இந்த வார்த்தை அந்த பணக்கார வாலிபனை ரொம்பவும் மனமடியச் செய்தது. ஆனால் ஆண்டவர் அவன் மீது கொண்ட அன்பினால் அவனை மேம்படுத்த முயற்சி செய்தார். அவனை அதிகமாக நேசித்தார். உயர்ந்த, மேம்படுத்த பூமிக்குரிய வாழ்க்கையை காட்டிலும் நித்திய வாழ்வு உயர்ந்தது என வாலிபன் உணர்ந்து கொள்ள ஆண்டவர் இந்த வார்த்தைகளை கூறி அன்பு காட்டினார். அந்த வாலிபன் புரிந்துக்கொள்ளவும் ஏற்கவும் மனமில்லாமல் ஆண்டவரை விட்டு போய்விட்டான்.

அன்பான வாலிப தம்பி, தங்கைகளே! கடவுளுடைய அன்பு என்பது நம்மை மென்மேலும் மேம்படுத்தி, நமது வாழ்வின் மற்றும் குணத்தின் தரத்தினை உயர்த்துவதாகும். **"நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் ." (வெளி 22:11).** என அவர் ஊக்கப்படுத்தி உயர்த்துகிறவராயிருக்கின்றார். எவ்வளவு பேர் மோசமாக இருக்கின்றார்கள் ஆனால் நான் தான் பரிசுத்தமாக, ஒழுங்கா இருக்கின்றேனே என்னையவே ஏன் ஒழுங்கா இரு என்று சொல்கின்றீர்கள் என நாம் கோவித்துக் கொள்கின்றோம். அப்படி கோவித்துக்கொள்ளாமல், போதகர்களோ, பெற்றோரோ நம்மிடம் உள்ள குறைகளை சுட்டிக்காண்பிக்கும் போது, கடவுள் என் மீது கொண்ட மிகுதியான அன்பினால் என்னை மேம்படுத்துகின்றார். என புரிந்து, சத்தியத்தின்படி சுட்டிக்காண்ப்பிக்கின்ற குறைகளை திருத்தி, கடவுளின் அன்பில் நிலைத்திருப்போம்.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. மிரியாம் செய்த பாவம் என்ன?
2. கடவுள் நம்மை நேசிப்பதினால் என்ன செய்வார்?
3. சகேயு மனந்திரும்பி எதை விட்டுவிட்டார்?
4. மார்த்தன், மரியாள் அழுதபோது இயேசு என்ன செய்தார்?
5. தன்னிடம் திரும்பி வந்த மகனை அப்பா சேர்த்துக்கொண்டாரா?

# பாவியின் மீதும் இயேசு அன்பு

சிறுவர் பகுதி

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா! நீங்கள் எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இப்பொழுது நாம் என்ன கற்றுக்கொள்ளபோகிறோம் தெரியுமா? ஆண்டவர் இயேசு பாவியாகிய சகேயுவின் மீது அன்புகூர்ந்தார். அதை பற்றி தெரிந்துக்கொள்ள போகிறோம்.

ஒருமுறை இயேசு எரிகோவிற்கு வந்திருந்தார், அப்பொழுது திரலான ஜனங்கள் அவர் கூடப்போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சகேயு என்னும் மனிதன். இயேசு வந்திருப்பதை கேள்விப்பட்டு, அவரைத் தேடி ஓடினான், ஆனால் கூட்டம் அதிகமாக இருந்ததினால், அவனால் இயேசுவை பார்க்கமுடியவில்லை. அதனால் அவன் இயேசுவுக்கு முன்னாக ஓடி, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவை பார்த்தான். இயேசு அங்கு நின்று அண்ணார்ந்து பார்த்து, சகேயுவே, நீ கீழே இறங்கி வா என்றார். அவன் உடனே கீழே இறங்கி வந்தான். இயேசு அவன் வீட்டுக்கு போனார். அப்பொழுது ஜனங்கள் இவர் பாவியான இவனோடே போறாரே என்று முறுமுறுத்தார்கள். இயேசு அவன் வீட்டுக்கு போய் வசனத்தை சொல்லிக்கொடுத்தார். சகேயு மனந்திருந்தி பாவத்தை விட்டுவிட்டான். நான் அநியாயமாய் யாரிடமாவது எதையாகிலும் வாங்கினால் திரும்பி நான்கு மடங்கு கொடுத்திடுறேன் என்றான்.



பிள்ளைகளா, சகேயு அண்ணனை எல்லாரும் பாவி என்று புறக்கணித்தனர், காரணம் அவரது வாழ்க்கையும் வேலையும் அப்படிப்பட்டதாக இருந்தது. ஆயினும் ஆண்டவர் இயேசுவை பார்க்க வேண்டும் என தேடி வந்ததினால், ஆண்டவர் இயேசு அவனுடன் அவனுடைய வீட்டிற்கு போனார். அவருடைய அன்பினால், அவன் திருந்தினான். கர்த்தருடைய பிள்ளைகளே நீங்களும், கர்த்தரை தேடி வருகின்றவர்களிடம், இயேசுவைப்போல அன்பு செலுத்தி, அவர்கள் தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திருந்த உதவி செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : 1 தீமோத்தேயு 1:15** "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்."

— அன்பு ஏசுதாஸ்

# கண்டிக்கும் கடவுளின் அன்பு

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ் ! உயிர்தெழுந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம் நம்மை படைத்த பரம பிதாவின் அன்பை குறித்து படிப்போமா?

கர்த்தருடைய வேலைக்காரனான மோசே, இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து, கானான் தேசத்தை நோக்கி கர்த்தருடைய வழிகாட்டுதலின்படி வழிநடத்தி வந்தார். அப்படி வழிநடத்திக்கொண்டு வருகையில், அவனுடைய மூத்த சகோதரி அதாவது அக்கா, அவர்கள் பெயர் மிரியாம். அவளும் ஒரு தீர்க்கதரிசிதான். ஒருநாள், அவனுடைய அக்கா, "கர்த்தர் மோசேயை கொண்டு மாத்திரமா பேசினார், எங்களை கொண்டும் பேசினார்" என மக்களிடத்தில் மோசேக்கு விரோதமாக பேசினாள்.

இந்த வார்த்தையை கர்த்தர் கேட்டார். அது அவருக்கு கோபத்தை வரவழைத்தது. மோசேவோ ஒன்றும் பேசாமல், அமைதியாக (சாந்தமாக) இருந்தான். உடனே, கர்த்தர் மோசேயையும், அவனுடைய அண்ணனாகிய ஆரோனையும், அக்காவாகிய மிரியாமையும் ஆசாரிப்பு கூடாரத்திற்கு புறப்பட்டு வாருங்கள் என்று சொன்னார்.



மூவரும் ஆசாரிப்பு கூடாரத்திற்கு சென்றனர். அப்பொழுது கர்த்தர், மிரியாம் மற்றும் ஆரோனை நோக்கி: என் வார்த்தைகளைக்

கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்று சொல்லி அவர்களை கண்டித்தார்.

மேலும், மிரியாம் பேசின வார்த்தையினிமித்தம் அவளுக்கு குஷ்டரோகம் வரும்படி செய்தார். இதனை கண்ட மோசே, கர்த்தரிடத்திலே, இவள் செய்த பாவத்தினை மன்னியுங்கள், அவளை குணமாக்குங்கள் என்று கெஞ்சி ஜெபம் செய்தான். அப்பா பிள்ளையின் தவறினிமித்தம் அடித்தால், அது அவளுக்கு வெட்கமாக இருந்தால், அந்த வெட்கம் ஏழு நாள் இருந்தது. பின்பு குணமாகி அவர்களுடனே சேர்த்துக்கொள்ளப்பட்டாள்.

குட்டீஸ், நாம் தவறு செய்யும்போது, கடவுள் நம்மை நேசிப்பதினால், அவர் நம்மை கண்டித்தும், தண்டித்தும் திருத்துவார். அப்படி அவர் நம்மை கண்டிப்பதும் தண்டிப்பதும் நாம் வருந்தி, திருந்துவதற்கு தான் ஒழிய நம்மை அழிப்பதற்கு அல்ல, நம்மீது கொண்ட வெறுப்பினாலும் அல்ல மாறாக நம்மீது கொண்ட அன்பினால், நாம் கெட்டுபோகாமல், நம் தவறுகளை திருத்திக்கொண்டு வாழ்வதற்கு தான் என்பதனை புரிந்து, புத்திசாலி பிள்ளைகளாக தவறுகளை வெறுத்து, கர்த்தரை நேசிப்போம். அதுபோலவே நம்மை வசனத்தின்படி கண்டித்து நடத்தும் பெற்றோரையும், கர்த்தருடைய ஊழியர்களையும் நேசிப்போம். அவர்கள் நம்மீது கொண்ட அன்பிற்காக கடவுளுக்கு நன்றி சொல்லுவோம். நீங்க செய்வீங்க தானே?

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 3:11.12** "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன்தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச்சிட்சிக்கிறார்."


— குமினி பிரதீப்

## துன்பத்தில் உதவும் கடவுளின் அன்பு

சிறுவர் பகுதி

மழலை செல்லங்கள், அனைவருக்கும் அன்பான ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள்.

நம்மை படைத்த பரலோக கடவுள் மிகவும் அன்பானவர். அவருடைய அன்பை ஆண்டவர் இயேசு செயல்களாலும், உவமைகளினாலும் விளக்கி காண்பித்தார். இந்த மாதத்திலும் துன்பங்களில் நம்மை காப்பாற்றும் கடவுளின் அன்பை பற்றி தெரிஞ்சுக்கொள்வோமா?



ஆண்டவர் இயேசு இந்த பூமியில் இருந்த நாட்களில் அனைவரிடமும் அன்புள்ளவராக இருந்தார். அவர் நேசித்த லாசரு என்ற ஒரு அண்ணன், பெத்தானியா என்ற ஊரில் இருந்தார். அவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். ஒருவர் மார்த்தாள் இன்னொருவர் மரியாள். அந்த அண்ணன் உடல் நிலை சரியில்லாமல் நோய் வந்து இறந்துப்போனார். இந்த செய்தியறிந்த ஆண்டவர் இயேசு அந்த ஊருக்கு போனார்.

மார்த்தாள், மரியாள் அனைவரும் ஆண்டவரே நீங்கள் நேசித்த லாசரு செத்துபோய்ட்டான் என்று சொன்னார்கள். அவர்களும் அவர்கள் பின்னே ஆறுதல் சொல்ல வந்த அந்த ஊர் மக்கள் அனைவரும் அழுது புலம்பினர். அதனை கண்ட ஆண்டவர் அழுதார். பார்த்தீங்களா? நம் ஆண்டவர் எவ்வளவு அன்பானவர். நமக்கு ஒரு கஷ்டம் என்றால் அது ஆண்டவருக்கும் கஷ்டமாயிருக்கிறது.

பிறகு, ஆண்டவர் கல்லறையை காண்பிக்க சொன்னார். அவர்களோ, இறந்து நான்கு நாள் ஆயிற்றே, இப்பொழுது நாறுமே என்று

சொன்னார்கள். ஆண்டவரோ கல்லரைக்கு சென்று, லாசருவே வெளியே வா என்று சொன்னார். செத்துப்போய் நாறிபோன லாசரு உயிரோடு வெளியே வந்தார். இதனை கண்ட அனைவரும் மகிழந்தனர். கடவுளை மகிமைப்படுத்தி ஆண்டவரை விசுவாசித்தனர்.

பார்த்திங்களா செல்லங்களே, ஆண்டவர் அவர் நேசிக்கின்ற அவர் நேசிக்கின்ற லாசருக்கும் அவன் குடும்பத்திற்கும் ஒரு துன்பம் வந்ததும், அதில் அவர்களுக்கு உதவி செய்கின்றவராக இருந்தார். அதே போல அவரை நேசிக்கின்ற அவரால் நேசிக்கப்படுகின்ற நாம் அவரை தொடர்ந்து விசுவாசத்தோடு அவரை தேடுவோம். அவர் நமது துன்பத்திலும் நம்மை காப்பாராக.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 34:19** "நீதிமானுக்கு வரும் துன்பங்கள்அ நேகமாயிருக்கும்,க ர்த்தர்அ வைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்."

— பிரியா ஆண்டனி

# அரவணைக்கும் கடவுளின் அன்பு

அன்புள்ள குட்டீஸ்! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் ஒரு ஊர்ல ஒரு அப்பா 2 மகன்கள் இருந்தாங்க. அந்த அப்பாவுக்கு மகன்கள் மேலே மிகவும் பாசம் இருந்தது. ஆனால் அவருடைய 2வது மகனுக்கு தன்னுடைய அப்பா மீது பாசமே கிடையாது. ஒரு நாள் அப்பாவிடம் வந்து அப்பா அப்பா என் சொத்தை எனக்கு பிரிச்சுதாங்க என்று கேட்டான் அப்பா மிகவும் வருத்தத்துடன் ஏன் என்று கேட்டார். ஆனால், அவன் அவனுடைய சொத்தை சரிபாதி பிரிச்சுதரும்படி ரொம்ப கண்டிப்பாக கேட்டான். அவன் அப்பாவும் ரொம்ப வருத்தத்துடன் கொடுத்துவிட்டார். அவன் தன் தந்தையை பற்றி கவலைப்படாமல் வீட்டைவிட்டு வெளியே போய் தவறான வழியில் சொத்தையெல்லாம் செலவழித்தான். எல்லா சொத்தும் குறைய குறைய நண்பர்கள் அவனை விட்டு போக ஆரம்பித்தார்கள் ஒரு நாள் அவனுடைய மொத்த பணமும் காலியாக அவன் நண்பர்கள் எல்லாரும் அவனை விட்டு சென்றார்கள். அவன் பசியினால் வேலை தேட ஆரம்பித்தான். வேலையே கிடைக்கவில்லை, கடைசியில் பன்றிகளுக்கு சாப்பாடு வைக்கிற வேலைதான் கிடைத்தது. சரி வேற வழியில்லாமல் அதை செய்தான். அவனுக்கு மிகவும் பசி எடுத்தது, அதனால் பண்ணி தவிடை சாப்பிடலாம் என்று நினைத்தான், அதை பார்த்த அந்த எஜமான் அவனை வேலையை விட்டு விரட்டி விட்டான்.

அப்பொழுது அவனுக்கு தன் தந்தையின் வீட்டிலே வேலைக்காரர்கள் கூட நல்ல உணவு சாப்பிடுவார்களே, நாமோ இங்கு வந்து இவ்வளவு கஷ்டபடுகிறோமே நம்ம போய் நம்ம அப்பாவிடம் மன்னிப்பு கேட்போம் என்று அந்த இடத்தை விட்டு கிழம்பினான் போற வழியில் தான் நம் அப்பாவிடம் ரொம்ப கோபமாக பேசிட்டோமே அவர் மனதை கஷ்டபடுத்திடோமே நம்மளை அவர் ஏற்றுக்கொள்வாரா என்று தெரியவில்லை அதனாலே நம்மள ஒரு வேலைக்காரனாவது ஏற்று கொள்ள சொல்வோம் என்று நினைத்தான்.



ஆனால் அவன் வருவதை தூரத்தில் அறிந்த தந்தை , ஓடிச்சென்று அவனை கட்டிபிடித்து முத்தம் கொடுத்தார். அவன் மன்னிப்பு கேட்டு அழுதான் அப்பா அவனை மன்னித்துவிட்டார். வேலைக்காரர்களை அழைத்து அவனுக்கு விருந்து ஆயத்தப்பண்ண சொன்னார் எல்லோரும் சந்தோஷமாக விருந்து கொண்டாடினார்கள்.

அதே போல தான் பிள்ளைகளாகிய நாம் பாவம் செய்தால் மனந்திருந்தி (கடவுளிடம்) கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேட்டால், அவர் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வார். அவருடைய அன்பு நம்மை மன்னிக்கும் மற்றும் நாம் வாழ மறு வாய்ப்பளிக்கும்.

**மனப்பாட வசனம் : யோவான் 6:37** "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை."

— பெவர்லி கிங்ஸ்லி

# ஓர் ஆண்டிற்குள் முழு வேதாகமத்தை படிக்க அட்டவணை

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| அக்டோபர் 1 | யோனா; மீகா 1-7 |
| அக்டோபர் 2 | நாகூம் 1-3; ஆபகூக் 1-3 |
| அக்டோபர் 3 | செப்பனியா 1-3 |
| அக்டோபர் 4 | ஆகாய் 1-2 |
| அக்டோபர் 5 | சகரியா 1-7 |
| அக்டோபர் 6 | சகரியா 8-14 |
| அக்டோபர் 7 | மல்கியா 1-4 |
| அக்டோபர் 8 | மத்தேயு 1-4 |
| அக்டோபர் 9 | மத்தேயு 5-7 |
| அக்டோபர் 10 | மத்தேயு 8-10 |
| அக்டோபர் 11 | மத்தேயு 11-12 |
| அக்டோபர் 12 | மத்தேயு 13-15 |
| அக்டோபர் 13 | மத்தேயு 16-18 |
| அக்டோபர் 14 | மத்தேயு 19-20 |
| அக்டோபர் 15 | மத்தேயு 21-22 |
| அக்டோபர் 16 | மத்தேயு 23-24 |
| அக்டோபர் 17 | மத்தேயு 25-26 |
| அக்டோபர் 18 | மத்தேயு 27-28 |
| அக்டோபர் 19 | மாற்கு 1-3 |
| அக்டோபர் 20 | மாற்கு 4-5 |
| அக்டோபர் 21 | மாற்கு 6-7 |
| அக்டோபர் 22 | மாற்கு 8-10 |
| அக்டோபர் 23 | மாற்கு 11-12 |
| அக்டோபர் 24 | மாற்கு 13-14 |
| அக்டோபர் 25 | மாற்கு 15-16 |
| அக்டோபர் 26 | லூக்கா 1-2 |
| அக்டோபர் 27 | லூக்கா 3-4 |
| அக்டோபர் 28 | லூக்கா 5-6 |
| அக்டோபர் 29 | லூக்கா 7-8 |
| அக்டோபர் 30 | லூக்கா 9-10 |
| அக்டோபர் 31 | லூக்கா 11-12 |
| நவம்பர் 1 | லூக்கா 13-14 |
| நவம்பர் 2 | லூக்கா 15-16 |
| நவம்பர் 3 | லூக்கா 17-18 |
| நவம்பர் 4 | லூக்கா 19-20 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| நவம்பர் 5 | லூக்கா 21-22 |
| நவம்பர் 6 | லூக்கா 23-24 |
| நவம்பர் 7 | யோவான் 1-2 |
| நவம்பர் 8 | யோவான் 3-4 |
| நவம்பர் 9 | யோவான் 5-6 |
| நவம்பர் 10 | யோவான் 7-8 |
| நவம்பர் 11 | யோவான் 9-10 |
| நவம்பர் 12 | யோவான் 11-12 |
| நவம்பர் 13 | யோவான் 13-14 |
| நவம்பர் 14 | யோவான் 15-17 |
| நவம்பர் 15 | யோவான் 18-21 |
| நவம்பர் 16 | அப்போஸ்தலர் 1-2 |
| நவம்பர் 17 | அப்போஸ்தலர் 3-4 |
| நவம்பர் 18 | அப்போஸ்தலர் 5-7 |
| நவம்பர் 19 | அப்போஸ்தலர் 8-9 |
| நவம்பர் 20 | அப்போஸ்தலர் 10-11 |
| நவம்பர் 21 | அப்போஸ்தலர் 12-13 |
| நவம்பர் 22 | அப்போஸ்தலர் 14-16 |
| நவம்பர் 23 | அப்போஸ்தலர் 17-19 |
| நவம்பர் 24 | அப்போஸ்தலர் 20-22 |
| நவம்பர் 25 | அப்போஸ்தலர் 23-25 |
| நவம்பர் 26 | அப்போஸ்தலர் 26-28 |
| நவம்பர் 27 | ரோமர் 1-3 |
| நவம்பர் 28 | ரோமர் 4-6 |
| நவம்பர் 29 | ரோமர் 7-9 |
| நவம்பர் 30 | ரோமர் 10-12 |
| டிசம்பர் 1 | ரோமர் 13-16 |
| டிசம்பர் 2 | 1 கொரிந்தியர் 1-4 |
| டிசம்பர் 3 | 1 கொரிந்தியர் 5-8 |
| டிசம்பர் 4 | 1 கொரிந்தியர் 9-12 |
| டிசம்பர் 5 | 1 கொரிந்தியர் 13-16 |
| டிசம்பர் 6 | 2 கொரிந்தியர் 1-3 |
| டிசம்பர் 7 | 2 கொரிந்தியர் 4-8 |
| டிசம்பர் 8 | 2 கொரிந்தியர் 9-13 |
| டிசம்பர் 9 | கலாத்தியர் 1-4 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| டிசம்பர் 10 | கலாத்தியர் 5-6; எபேசியர் 1-2 |
| டிசம்பர் 11 | எபேசியர் 3-6 |
| டிசம்பர் 12 | பிலிப்பியர் 1-4 |
| டிசம்பர் 13 | கொலோசெயர் 1-4; பிலேமோன் |
| டிசம்பர் 14 | 1 தெசலோனிக்கேயர் 1-5 |
| டிசம்பர் 15 | 2 தெசலோனிக்கேயர் 1-3 |
| டிசம்பர் 16 | 1 தீமோத்தேயு 1-6 |
| டிசம்பர் 17 | 2 தீமோத்தேயு 1-4; தீத்து 1-3 |
| டிசம்பர் 18 | எபிரேயர் 1-3 |
| டிசம்பர் 19 | எபிரேயர் 4-6 |
| டிசம்பர் 20 | எபிரேயர் 7-10 |
| டிசம்பர் 21 | எபிரேயர் 11-13 |
| டிசம்பர் 22 | யாக்கோபு 1-3 |
| டிசம்பர் 23 | யாக்கோபு 4-5; 1 பேதுரு 1-3 |
| டிசம்பர் 24 | பேதுரு 4-5; 2 பேதுரு 1-3 |
| டிசம்பர் 25 | 1 யோவான் 1-5 |
| டிசம்பர் 26 | 2 யோவான், 3 யோவான், யூதா |
| டிசம்பர் 27 | வெளிப்படுத்துதல் 1-4 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| டிசம்பர் 28 | வெளிப்படுத்துதல் 5-9 |
| டிசம்பர் 29 | வெளிப்படுத்துதல் 10-13 |
| டிசம்பர் 30 | வெளிப்படுத்துதல் 14-18 |
| டிசம்பர் 31 | வெளிப்படுத்துதல் 19-22 |

### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-

G-Pay No. 92 4421 4421

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSE Code : SBIN0070704
Branch : SBI - Ponmeni, Madurai.

## Form IV

### Statement about ownership and other particulars about Newspaper

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Madurai |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printers Name | : | N. Jayakarthikeyan |
| Nationality | : | Indian |
| Address | : | Thee Classic Printers, 27, Kakathope Street, Madurai - 625 001 |
| 4. Publisher's Name | : | P.C. Philemon Rajah |
| Nationality | : | Indian |
| Address | : | 45 C/1, Church Lane, Coronation St., Arasaradi, Madurai - 625 016 |
| 5. Editor's Name | : | P.C. Philemon Rajah |

I, P.C. Philemon Rajah, hereby declare that the particular given above are true to the best of my knowledge and belief.

P.C. Philemon Rajah
Publisher & Editor

Date : 09-03-2021

## ஏப்ரல் மாத கேள்விகள்

1. அன்பு யாரால் உண்டாயிருக்கிறது?

2. அறிந்துக்கொள்ள வேண்டிய அறிவுக்கெட்டாத அன்பு எது?

3. சகலத்தையும் தாங்கும் சகலலத்தையும் சகிக்கும் அது எது?

4. கர்த்தர் யாரை சிட்சிக்கிறார் என சாலமோன் ஞானி கூறுகின்றார்?

5. துன்மார்க்கன், கர்த்தருக்கு பிரியமாக மாற என்ன செய்ய வேண்டும்?

6. 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என வாசிப்பதெங்கே?

7. இச்சிறியரில் ஒருவரும் கெட்டுப் போக கூடாது என்பது யாருடைய சித்தம்?

8. எப்படி 'அன்புகூறகடவோம்' என யோவான் சொல்கின்றார்?

9. இயேசு, பணக்கார வாலிபனிடம் அன்பு கூர்ந்து சொன்னது என்ன?

10. அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை நாடாது அது எது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-05-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. யோபு 5:9 | 6. ரோமர் 4:21 |
| 2. யோபு 37:5 | 7. மாற் 5:34 |
| 3. ஏசாயா 51:12 | 8. உபா 29:29 |
| 4. மத்தேயு 10:32 | 9. ரோ 1:20 |
| 5. சங் 1:3 | 10. யோவான் 20:30 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
2. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
3. J.V. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
4. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
5. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
6. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
7. Mrs. குளோரி திலகவதி – சென்னை
8. Mrs. K. ராணி மூர்த்தி – நெல்லை
9. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
10. Mrs. P. சமாதானம் பீட்டர் – திருச்சி
11. Mr. ஜெபர்சன் – திண்டுக்கல்
12. Mr. டேவிட் சாந்தகுமார் – செங்கோட்டை
13. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கடலூர்
14. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
15. D. மீனாள் – மூலனூர்
16. Mrs. ஜாய் ஜோசுவா – வெள்ளறம்
17. Mrs. மேரி ராஜ் – மதுரை
18. Mrs. ஹெலன் திலக் – மதுரை
19. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
20. D. வர்ஷினி – மூலனூர்
21. P. பரமேஸ்வரி – மூலனூர்
22. Mrs. M. ஜெனி – கரூர்
23. D. தேன்மொழி – மூலனூர்
24. D. விக்னேஷ் – மூலனூர்
25. R.P. டேவிட் – சேலம்
26. Mrs. பாக்கியராஜம் – மதுரை
27. Mr. G.J. அப்பாதுரை – நெல்லை
28. J. ஜான்சி – ஆனைமலை
29. Mrs. லீலா ஜோசப் – கோவை
30. J. ரேவதி ஜெயசந்திரன் – கரிமேடு
31. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
32. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
33. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
34. S. சூசை மரியான் – சென்னை
35. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
36. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
37. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
38. Mr. M. ஜெனி – கரூர்
39. S. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
40. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
41. Mrs. வைலட் கிறிஸ்டோபர்– தளவாய்புரம்
42. Mr. ஜேம்ஸ்– திண்டுக்கல்
43. Mrs. செல்வமணி – சேலம்
44. Mrs. ஞான சிரோன்மணி – மதுரை
45. P. வசந்த் – குன்னூர்
46. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
47. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
48. P. சூரிய பிரியா – திருமங்கலம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Place of Publication : Arasaradi, Madurai
Printer's Name : N. JAYAKARTHIKEYAN
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th April 2021
Posted at Arasaradi HPO on 10th 11th April 2021

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

### கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

## கிருபையின் கீதங்கள்




பாடல் புத்தகம்


421 பக்கங்கள்


514 தமிழ் பாடல்கள்

29 ஆங்கில பாடல்கள்

100 சிறுவர் பாடல்களுடன்

விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431




WORLD VEDIO BIBLE SCHOOL
ENGLISH BOOKS
NOW AVAILABLE IN INDIA

INTERNATIONAL EDITION - "USA PRINTING"

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers